வகுப்பு - 7, 8 - வேதியியல்,
3, 10 - நம்மைச் சுற்றி நிகழும் மாற்றங்கள்

106. _____ புவி வெப்பமயமாதலுக்குக் காரணமாகிறது.

1) கார்பன் டை ஆக்ஸைடு
2) குளோரோ ∴புளூரோ கார்பன்
3) மீத்தேன்
4) அனைத்தும்

107. பொருத்துக.

a) துருப்பிடித்தல்	-	i) ஒளிச்சேர்க்கை
b) மின்னாற்பகுத்தல்	-	ii) ஹேபர்முறை
c) வெப்ப வேதிவினை	-	iii) இரும்பு
d) ஒளி வேதிவினை	-	iv) பிரைன்
e) வினைவேக மாற்றம்	-	v) சுண்ணாம்புக்கல் சிதைவடைதல்

1) a - ii b - v c - iv d - i e - iii
2) a - iii b - iv c - v d - I e - ii
3) a - i b - ii c - iv d - iii e - v
4) a - i b - iii c - iv d - ii e - v

108. பொருத்துக.

a) கெட்டுப்போதல்	-	i) உயிரி வினையூக்கி
b) ஓசோன்	-	ii) சிதைவடைதல்
c) இரும்பு	-	iii) உணவு
d) ஈஸ்ட்	-	iv) O_3
e) கால்சியம் கார்பனேட்	-	v) துருப்பிடித்தல்

1) a - ii b - v c - iv d - i e - iii
2) a - iii b - iv c - v d - i e - ii
3) a - i b - ii c - iv d - iii e - v
4) a - i b - iii c - iv d - ii e - v

NMMS தேர்வில் கேட்கப்பட்ட வினாக்கள்:

109. வெண்பாஸ்பரஸ், எவ்வகையான எரிதலுக்கு எடுத்துக்காட்டு? (NMMS 2015 - 2016)

(1) வேகமாக எரிதல்
(2) தன்னிச்சையாக எரிதல்
(3) முற்றுப்பெறா எரிதல்
(4) மெதுவாக எரிதல்

110. காய்கறிகள் மற்றும் பழங்களை வெட்டி காற்றில் வைக்கும் போது பழுப்புநிறமாக மாறக் காரணம் (NMMS 2015 - 2016)

LIVEWORKSHEETS

(1) கெராட்டின் (2) கிரியாட்டினைன் (3) மெலானின் (4) டானின்

111. குடுவையிலுள்ள பனிக்கட்டி துண்டுகள் உருகும்போது, நீராக மாறும். இந்த இயற்பியல் மாற்றத்தின்போது, அதன் நிறை (NMMS 2015 - 2016)

(1) அதிகரிக்கும் (2) குறையும்

(3) அதிகரிக்கலாம் அல்லது குறையலாம் (4) மாறாமல் இருக்கும்

112. கீழ்க் குறிப்பிட்டுள்ள வினையை பூர்த்தி செய்யவும். (NMMS 2018)

குளுக்கோஸ் + உயிர்வளி → _____ + _____ + ஆற்றல்.

(1) ஆக்சிஜன் + நீர் (2) கரியமில வாயு + நீர்

(3) எத்தில் ஆல்கஹால் + நீர் (4) கரியமில வாயு + ஆக்சிஜன்

113. எண்ணெய் தீப்பற்றி எரியும்போது _____ பயன்படுத்தக் கூடாது. (NMMS 2018)

(1) மண் (2) நீர்

(3) கார்பன்-டை-ஆக்சைடு (4) நுரைப்பான்

114. இரும்பு துருப்பிடித்தல் என்பது _____ எரிதலுக்கு உதாரணம் ஆகும். (NMMS 2018)

(1) முற்றுப்பெறா (2) அதிவேகமாக (3) வேகமாக (4) மெதுவாக

115. வேதியியல் மாற்றம் நிகழ்வது _____. (NMMS 2019 - 2020)

(1) பால் தயிராக மாறுவது (2) குச்சி ஐஸ் உருகுதல்

(3) படிகமாக்குதல் (4) ஒரு காகிதத்தைத் துண்டுகளாக்குதல்

116. பின்வருவனவற்றுள் எத்தனை இயற்பியல் மாற்றங்கள் உள்ளன? (NMMS 2020 - 21)

உருகுதல், உறைதல், துருப்பிடித்தல், கொதித்தல், நொதித்தல், தயிராதல், ஆவிசுருங்குதல்

(1) 5 (2) 6 (3) 4 (4) 7

117. ாஸ்ட் என்பது ஒரு _____. (NMMS 2020 - 21)

(1) பூஞ்சை (2) வினையூக்கி (3) நுண்ணுயிரி (4) அனைத்தும்

LIVEWORKSHEETS